பத்திரிகை ஆசிரியர், உரிமையாளர்கள் மீது வழக்குகள்

திரு. பி. திருஞானசம்பந்தம்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1967-70-ஆம் ஆண்டுவரை எத்தனை பத்திரிகை ஆசிரியர், உரிமையாளர்கள் மீது ஆட்சேபகரமான செய்திகள் வெளியிட்டதாக வழக்குகள் தொடரப்பட்டுள்ளன?

(இ) எத்தனை வழக்குகள் மீது இதுவரை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது?

(உ) விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே,

(அ) 1967 முதல் 1970 வரையில் ஆட்சேபகரமான செய்திகளை வெளியிட்டேசய்கித்தாள்கள் சிலவற்றின் ஆசிரியர்கள், அச்சிடுவோர், வெளியிடுவோர் மீது 12 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

(இ) ஒன்பது வழக்குகளில் தீர்ப்புகள் அளிக்கப்பட்டன. மூன்று வழக்குகள் அரசினால் திரும்பப் பெறப்பட்டன.

(உ) இந்த வழக்குகளைப் பற்றிய விவர அறிக்கை @ மேலவையில் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பி. திருஞானசம்பந்தம்: தலைவர் அவர்களே, சில பத்திரிகைகள் ஆதாரமற்ற செய்திகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருவதால் அப்படிப்பட்ட பத்திரிகைகளைத் தடை செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பத்திரிகைகளைத் தடை செய்யும் உத்தேசம் எதுவும் இல்லை. மக்களே பார்த்து அவற்றை வாங்குவதை நிறுத்தி அவர்களாகவே தடை செய்து விடுவார்கள்.

Posters on the Name Board at Karunanidhi Nagar, Madras

* 2 Q.—THIRU P. THIRUGNANASAMBANDAM: Will the Hon. the Chief Minister be pleased to state whether it is a fact that on 10th August 1971 wall posters threatening to murder the Chief Minister have been displayed on the name board at Karunanidhi Nagar, Madras?

சென்னை கருணாநிதி நகரில் சுவரொட்டி

திரு. பி. திருஞானசம்பந்தம்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

சென்னை கருணாநிதி நகரில் உள்ள பெயர் பலகையின் மீது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களை கொலை செய்யப் போவதாக 10—8—1971-ஆம் நாள் ஏதேனும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தது உண்மையா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆம்.

10—8—1971-ம் நாளன்று கலைஞர் கருணாநிதி நகரில் சிமிட்டிப் பலகையில் "கலைஞர் கருணாநிதி நகர்" என்று தமிழில் எழுதப்பட்ட, மா

@ Printed as Appendix I on pages 59–62.

24th January 1972]

எழுத்துக்கள் அகற்றப்பட்டு, அந்த இடத்தில் முதலமைச்சரை அச்சுறுத்தல் வகையிலான நக்சல்பாரி முழக்கங்கள் கொண்ட 4 கையெழுத்துச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

THIRU D. SANTOSHAM : Sir, was investigation undertaken as to who was responsible for that and if so, was it possible to trace who were behind these posters?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 2-11-- 1971-ல் தீவிர வாதிகளில் பலரைப் போலீசார் கைது செய்தார்கள். அதில் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஆர். கே. சாமிநாதன் என்பவா ஒருவர். அவரிடம் போலீஸ் விசாரணை நடத்தியபோது ஆர். கே. சாமிநாதன், லஸ் ராகவன், கோடீஸ்வரராவ், சத்தியபாலன், குட்டப்பன், அன்பு இவர்களோடு கருணாநிதி நகருக்கு 10—8—1971-ல் சென்று அங்குள்ள கருணாநிதி நகர் என்ற எழுத்துக்களை அகற்றி தரையில் போட்டார்கள் என்பது வெளியாயிற்று. அத்துடன் அவர்களே மேற்படி போஸ்டர்களைத் தாங்களே ஒட்டியதாக ஒப்புக் கொண்டார்கள். 6 பேர்களில் சத்தியபாலன் தவிர 5 பேர்கள் கைது செய்யப் பட்டார்கள். தற்போது அவர்கள் போலீஸ் ரிமாண்டில் உள்ளார்கள். விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படுமென்று தகவல்.

Cabaret Dances

* 3 *Q*.—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether any raid was conducted by the Madras City Police on restaurants for performing cabaret dances during the year 1970; **and**

(*b*) if so, the details thereof?

கபேரா நடனங்கள்

திரு. எம். ஆறுமுகசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1970-ஆம் ஆண்டில் கபேரா நடனங்கள் நடத்தியதற்காகச் சிற்றுண்டிச் சாலைகளில் சென்னை மாநகரக் காவலர் திடீர்ச் சோதனை நடத்தியது உண்டா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) சென்னை மாநகர், அண்ணா சாலையில் உள்ள பால்ஸ் ஓட்டலில் ஆபாச நடனங்கள் நடத்தப்படுவதாகத் தலிப்பட்டவர் ஒருவரிடமிருந்து கிடைத்த புகாரின் பேரில் 31—5—1970-ல் காவலர் திடீர்ச் சோதனை செய்தனர். திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் இ.பி.கோ. 294-வது பிரிவின் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. மூன்று பேர் கைது செய்யப் பட்டனர். மூவர் மீதும் IX வது மாநகர் மாஜிஸ்ட்ரேட் முன்பு குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இதற்கிடையில், ஓட்டல் உரிமையாளர் உயர் நீதி மன்றத்தில் 'ரிட்' மனு தாக்கல் செய்து இடைக்காலத்தடை ஆணை பெற்றார். இவ்வழக்கு விசாரணை சென்னை உயர்நீதி மன்றத்தில் முடிவுறு நிலையிலுள்ளது.